சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை – 08.

ந.க.எண். 6902/ஆ2/2022, நாள். 27.09.2022

பொருள்: தமிழ் வளர்ச்சித் துறை – 2021–2022 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு – நாட்டிற்காக பாடுபட்ட தலைவர்களின் பிறந்த நாளன்று மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் வழங்குதல் – அவ்வகையில் 2022–2023 ஆம் நிதியாண்டிற்கு அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு 12.10.2022 அன்று பேச்சுப் போட்டிகள் நடத்துதல் – சென்னை மாவட்டப் பள்ளி மாணவர்களுக்கு மாவட்ட அளவில் பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசுகள், பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை 1 சென்னை–06, தமிழ்வளர்ச்சித் துறை இயக்குநரின் கடிதம் 9955/ஆ.மொ4/2022, நாள்.26.09.2022

*************

மேற்காண் பொருள் சார்ந்து பார்வையில் காணும் கடிதத்தில், தமிழ் வளர்ச்சித் துறையின் 2021–2022 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கார், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் கருத்துக்களையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வண்ணம் ஆண்டுதோறும் அவர்களது பிறந்த நாளன்று மாவட்ட அளவில் கல்லூரி, பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசு, பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது 2022–2023 ஆம் ஆண்டிற்கு மாவட்ட அளவில் பள்ளி மாணவர்களுக்கு அனைத்து மாவட்டங்களிலும் அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாளையொட்டி வருகிற 12.10.2022 அன்று பேச்சுப்போட்டிகள் நடைபெறவுள்ளன. மேலும், இப்பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.5000/– மும், இரண்டாம் பரிசு ரூ.3000/– மும், மூன்றாம் பரிசு ரூ.2000/– மும் வழங்கப்பெறும். மேலும், இப்போட்டியில் பங்கேற்று வெற்றிபெறும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு சிறப்பு பரிசு ரூ.2000/– வீதம் 2 பேருக்கும் மற்றும் சான்றிதழும் வழங்கப்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>போட்டிக்கான தலைப்புகள்</u>

1. அண்ணலின் அடிச்சுவட்டில்
2. காந்தி கண்ட இந்தியா
3. வேற்றுமையில் ஒற்றுமை
4. பாரத தேசமென்று பெயர் சொல்லுவோம்
5. காந்தியை வழிநடத்திய நிகழ்ச்சிகள்

மேற்காணும் தலைப்புகளை தங்கள் கல்வி மாவட்டத்திலுள்ள அனைத்து அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகளுக்கு தெரிவித்து ஒரு பள்ளிக்கு இரு மாணவர்கள் வீதம் கலந்து கொள்ளும் வகையில் மாணவர்களை பெருமளவில் பங்கேற்கும் வகையில் அறிவுறுத்துமாறு அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வருவாய் மாவட்ட அளவில் கீழ்க்கண்ட கல்வி மாவட்டங்களுக்கு அதற்கெதிரே குறிப்பிடப்பட்ட கல்வி மாவட்டத்தில் பேச்சுப்போட்டிகள் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

1. மேற்கு சென்னை மாவட்டத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெயர் பட்டியல்கள் - மத்திய சென்னை மாவட்டக் கல்வி அலுவலகத்திற்கும்.
2. கிழக்கு சென்னை மாவட்டத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெயர் பட்டியல்கள் - தென் சென்னை மாவட்டக் கல்வி அலுவலகத்தற்கும்.

3. வட சென்னை மாவட்டத்தின் சார்பில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் பெயர் பட்டியல்களை அதே மாவட்டத்திலும் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மேற்காண் விவரப்படி உள்ள கல்வி மாவட்டங்களில் கீழ்க்காண் மையங்களில் இறுதிப்போட்டிகள் நடைபெறும் என அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண். | இறுதிப் போட்டி நடைபெறும் மையங்கள் | போட்டி நடைபெறும் பள்ளிகள் விவரம் | தலைமை ஆசிரியர் / மைய ஒருங்கிணைப்பாளர் விவரம்/ அலைபேசி எண். |
|---|---|---|---|
| 1 | மத்திய சென்னை கல்வி மாவட்டம். | ஜெய்கோபால் கரோடியா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சைதாப்பேட்டை, சென்னை – 15. | தலைமை ஆசிரியர் 9445692342 |
| 2 | தென் சென்னை கல்வி மாவட்டம் | அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, அசோக் நகர், சென்னை – 83 | தலைமை ஆசிரியர் 7373008858 |
| 3 | வட சென்னை கல்வி மாவட்டம் | அரசு உயர்நிலைப் பள்ளி, வில்லிவாக்கம், சென்னை – 49. | தலைமை ஆசிரியர் 9841076721 |

பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு பேச்சுப் போட்டிகள் சென்னை வருவாய் மாவட்ட அளவில் மேற்காணும் 3 மையங்களிலும் நடைபெறும். பத்தி 3– ல் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்துப் பள்ளிகளும் தங்களுக்கென குறிப்பிடப்பட்டுள்ள மையத்தில் மாணவர்கள் கலந்துகொள்ளத் தக்கவகையில் தங்கள் பள்ளியின் மாணவர்களை தயார்படுத்தி அனுப்பிவைத்திடுமாறு அனைத்துப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: போட்டிக்கான விதிமுறைகள்.

முதன்மைக் கல்வி அலுவலர்
சென்னை – 08.

பெறுநர்
அனைத்து அரசு / அரசு உதவி பெறும் / தனியார் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள்,
சென்னை மாவட்டம்.

நகல்

1. கல்வி அலுவலர் ( சென்னை பெருநகராட்சி), சென்னை – 03.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
4. சென்னை–06. தமிழ்வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
5. சென்னை–06, பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநர்( நாட்டு நலப்பணித் திட்டம்) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
6. [illegible] பள்ளித் தலைமை ஆசிரியர்